**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 156/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **லெட்சுமணன்** | Caste | : |
| Father/Husband Name | : **போஸ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 26.03.2025**

**முதல் விசாரணை**

நான் வடபழஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. கடந்த 2018 ஆம் ஆண்டு தேதி மாதம் தெரியவில்லை மாலை 05.45 மணியளவில் பன்னியான் ரோடு அருகே எனது மனைவி இரட்டை கிணறு அருகே இரு சக்கர வாகனத்தில் அவரது அம்மா வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் அவர் கழுத்தில் இருந்த கவரிங் செயின் மற்றும் 2 பவுன் தங்க செயினை பறித்துகொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அதில் கவரிங் செயின் கீழே விழுந்துவிட்டது. தங்க செயினை எடுத்து கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும் கேள்விபட்டேன். அதில் அ.சா.1 எனது மனைவிக்கு கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. ஆம்புலன்சு மூலம் மதுரை

அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது சம்பந்தமாக எனது மனைவி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை மருத்துவமனையிலும் வீட்டிலும் வைத்து விசாரித்தார்கள். பொதுவாக வந்து விசாரணை செய்தார்கள், என்னை தனியாக குறிபிட்டு விசாரணை செய்யவில்லை. எந்த போலீசார் வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 156/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மலர்கொடி** | Caste | : |
| Father/Husband Name | : **லெட்சுமணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 26.03.2025**

**முதல் விசாரணை**

நான் வடபழஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் மெஜுரா கோட்ஸ்சில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு தேதி மாதம் தெரியவில்லை மாலை 05.45 மணியளவில் பன்னியான் ரோடு அருகே இரட்டை கிணறு அருகே நான் எனது இரு சக்கர வாகனத்தில் எனது அம்மா வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் எனது கழுத்தில் இருந்த கவரிங் செயின் மற்றும் 2 பவுன் தங்க செயினை பறித்தார்கள். அதில் கவரிங் செயின் கீழே விழுந்துவிட்டது. தங்க செயினை எடுத்து கொண்டு சென்றுவிட்டார்கள். அதில் நான் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. ஆம்புலன்சு மூலம் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மேற்படி என்னிடம் செயின் பறித்த இரண்டு நபர்களை என்னிடம் அடையாளம் காட்டமுடியும்.

நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி ஒருவர், மற்றொரு எதிரி நீதிமன்றத்திற்கு வந்தால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் மதுரை மருத்துவமனையில் வைதது சுமார் 07.00 மணியளவில் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அப்போது போலீசார் விசாரணை செய்தார்கள். பின்பு ஒரு வருடம் கழித்து எதிரியை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். அப்போதுதான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே சம்பவம் நடந்தபோது தெரியும். புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது நான் சற்று மயக்க நிலையில் இருந்ததால் எதிரிகளின் அங்கு அடையாளத்தை சொல்லவில்லை. மேற்படி ஒரு வருடம் காலத்திற்கு உட்பட்டு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. வழக்கிற்காக எதிரியை தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்காக எதிரியை எனக்கு தெரியும் என்றும், போலீசார் சொல்லிகொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அதன்பின்பு எந்த போலீசாரும் விசாரணை செய்யவில்லை. எதிரியை நான் ஒரு வருடம் கழித்து காவல் நிலையத்தில் பார்க்கவும் இல்லை போலீசார் என்னை விசாரணை செய்யவிலலை என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய தங்க நகையை போலீசார் மீட்டு கொடுக்கவில்லை. எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்தார்கள். வந்தது எனக்கு தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் வாகன விபத்தில் ஏற்பட்டது என்றும், மேற்படி விபத்தில் எனது கவரிங் நகை அறுந்து கீழே விழுந்துவிட்டது என்றும், புள்ளிவிபர கணக்கிற்கு போடப்பட்ட வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.